திருப்பழனிதனில்

ராகம்: ஷண்முகப்ரியா தாளம்: ஆதி
இயற்றியவர்: தங்கம் பரமேஸ்வரன்

பல்லவி
திருப்பழனிதனில் தவக்கோலம் பூண்ட கந்தா
உந்தன் திருவடி சரணடைந்தேன்
தமிழகந்தனிலொரு மலைமீதினிலே

அனுபல்லவி
மாந்தருக்கெல்லாம் மார்க பந்துவாம்
உற்ற நண்பனாம் உமையாள் மகனே

அன்புக்கடலாய் அணைக்கும் உருவே
அறிவுக்கனலாம் குமார குருவே

சரணம்
கனிதனைப்பெறவே கானமயிலேறி
வையகம் வலம் வந்த பாலனே மன
கனிவு பெற்றே மெய்ஞ்ஞான
சுடரான சீலனே வடிவேலனே

நான்மறை பொருளெல்லாம் நல்க உரைத்தவா
குன்றில் நின்றாடும் கூத்தன் மைந்தனே

திருநீறணிந்து துறவறம் நாடி
தனிமை எளிமை இவைகளைத் தேடி

©Copyright 2001-2015, Thangam Parameswaran, Orleans Ontario Canada

©Copyright 2001-2015, Thangam Parameswaran, Orleans Ontario Canada